# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br>Miscellaneous : <br>Preliminary Register : CC .38/2019<br>Sessions : <br>Deposition of Witness for : LW-1/PW-1<br>Name : அரசு<br>Father's/Husband's Name : மகாலிங்கம்<br><br>Nationality : Indian | Village:<br>Age :35<br>Taluk :<br><br>Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 19.11.2025**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

<u>**முதல் விசாரணை**:</u>

நான் தற்போது ஆனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 19.03.2009 ம் தேதி காலை 9.30 மணியளவில் கரும்பு வெட்டும் வேலைக்காக பூந்தோட்டம் செல்வதற்காக நானும் அல்லி என்பவரும் சைக்கிளில் மானம்பாடி அருகே சென்று சாலையை கடந்து செல்ல முற்பட்ட போது பின்னால் வந்து வெள்ளை நிற கார் மோதி நாங்கள் இருவரும் விபத்திற்குள்ளானோம். அதில் எனக்கு வலது முழங்காலில் 3 தையல் போடும் அளவிற்கு

காயமும், வலது கையில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது. அல்லி சம்பவ இடத்திலேயே உயிர் இழந்துவிட்டார். மேற்படி சம்பவம் சம்மந்தமாக நான் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது திருப்பனந்தாள் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் அதில் கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்மூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சம்பவ சமயத்தில் விபத்து ஏற்படுத்திய காரையும் கார் ஓட்டியவரையும் நான் பார்க்கவில்லை. நான் சைக்கிளுடன் கீழே விழுந்துவிட்டதால் பார்க்க முடியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மானம்பாடி பூந்தோட்டம் திருப்பமானது சென்னை-கும்பகோணம் நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்திற்கும் வெள்ளை நிற காருக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றாலும் நான்தான் சாலையை கவனிக்காமல் திடீரென குறுக்கே வந்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. போலிசார் வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கிய நிலையில் என்னை விசாரிக்கவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**